# 11–ஆம் வகுப்பு – வணிகவியல்

## அரசு பொதுத் தேர்வு – 2023–24

## மெல்ல கற்கும் மாணவர்கள் குறைந்த பட்ச தேர்ச்சி பெற வழிகாட்டி

### பகுதி – அ (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

### சரியான விடையைத் தேர்ந்தெடு

**பாட புத்தகத்தில் (BOOK BACK) உள்ள**

**135 ஒரு மதிப்பெண் வினாக்கள் படித்தால்**

**குறைந்த பட்சம் 12 முதல் 15 மதிப்பெண்கள் உறுதி**

---

### பகுதி – ஆ (இரு மதிப்பெண் வினாக்கள்)

### மிகக் குறுகிய வினாக்கள்

1. **பண்டமாற்று முறை என்றால் என்ன?**
   ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறை பண்டமாற்று முறை ஆகும்.
2. **நாளங்காடி என்றால் என்ன?**
   பகலில் வியாபாரம் நடைபெறும் இடம் நாளங்காடி என அழைக்கப்படுகிறது.
3. **அல்லங்காடி என்றால் என்ன?**
   இரவில் வியாபாரம் நடைபெறும் இடம் அல்லங்காடி என அழைக்கப்படுகிறது.
4. **பொருளதார நடவடிக்கைகள் என்றால் என்ன?**
   இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். **எ.கா : –** பழ வியாபாரி – பழங்களை விற்பனை செய்வது
5. **தொழில் என்றால் என்ன?**
   "தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை ஆகும்." **– ஜேம்ஸ் ஸ்டீபன்சன்**
6. **வேலை என்றால் என்ன?**
   கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி ஆற்றுவது வேலை ஆகும்.
   **எ.கா:–** மேலாளர்கள், எழுத்தர்கள், வங்கி அலுவலர்கள்
7. **வணிகத்தை வரையறு.**
   வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும், விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும். **– எவ்லின் தாமஸ்**
8. **உற்பத்தித் தொழில் என்றால் என்ன?**
   வளங்களை இயந்திரம் மற்றும் தொழில் நுட்பத் திறமையுடன் உபயோகிக்க தக்க பொருளாக மாற்றக் கூடியதே உற்பத்தித் தொழில் எனலாம்.
   **எ.கா: –** சிமெண்ட் உற்பத்தித் தொழில், ஜவுளி உற்பத்தித் தொழில்
9. **வியாபாரம் என்றால் என்ன?**
   வியாபாரம் என்ற சொல் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றல் செயல்களை உள்ளடக்கியது ஆகும்.
10. **வருமான வரி என்றால் என்ன?**
    - ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமான வரி எனப்படும்.
    - இது ஒரு நேர்முக வரி ஆகும்.
11. **முந்தைய ஆண்டு என்றால் என்ன?**
    - ஒரு ஆண்டில் ஈட்டிய வருமானம் அடுத்த ஆண்டில் வரி விதிக்கப்படும்.

- ♣ வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு முந்தைய ஆண்டு எனப்படும்.

**12. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?**

ஏப்ரல் 1–ம் தேதி முதல் மார்ச் 31–ம் தேதி வரை உள்ள காலம் கணக்கீட்டு ஆண்டு ஆகும்.

**13. மறைமுக வரியின் பொருள் தருக.**

வரிக்குரியவர் வரிச் சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலுமானால் அதுவே மறைமுக வரி எனப்படும். **எ.கா:–** சரக்கு மற்றும் சேவை வரி

**14. இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரிக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக**

**i)** சரக்கு மற்றும் சேவை வரி **ii)** மதிப்பு கூட்டு வரி

**iii)** ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி **iv)** சுங்க வரி

**15. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?**

சரக்கு மற்றும் சேவை வரி என்பது சரக்கு மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் வரி ஆகும்.

**16. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?**

மாநிலத்திற்குள்ளே அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி சரக்கு மற்றும் சேவை வரியாகும்.

**17. தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?**

ஒரு வியாபார நிறுவனத்தின் வணிகக் குறியீட்டை சட்டப்படி பயன்படுத்தும் உரிமம் பெற்ற ஒரு தனி நபரை தனி உரிமம் பெற்றவர் என அழைக்கிறோம்.

**18. தனி உரிமையியல் இரண்டு தீமைகளைக் கூறுக.**

i) தனி உரிமம் கட்டணம்

ii) நிலையான உரிமைத் தொகை செலுத்துதல்

iii) தனி உரிமம் அளித்தவர்களின் மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்துதல்

iv) சுதந்திரமின்மை

**19. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?**

வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை (அ) செயல்களைப் பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் என்று பெயர்.

**20. பெயர்ச்சியியல் என்றால் என்ன?**

- சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்து பணி பெயர்ச்சியியலில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது.
- மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் எனப்படுகிறது.

**21. வியாபாரத்தின் பொருள் தருக.**

இலாபம் ஈட்டும் நோக்கில் பொருட்களையும், சேவைகளையும் வாங்கி, விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரம் ஆகும்.

**22. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?**

ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபாரம் உள்நாட்டு வியாபாரம் ஆகும்.

**எ.கா:–** காஷ்மீர் ஆப்பிள் தமிழ் நாட்டில் விற்றல்.

**23. இறக்குமதி என்றால் என்ன?**

உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவது இறக்குமதி வியாபாரம் ஆகும். **எ.கா:–** பெட்ரோலிய பொருட்களை இறக்குமதி செய்தல்.

**24. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?**

மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது மறு ஏற்றுமதி ஆகும்.

**எகா:–** தென்னாப்பிரிக்காவிலிருந்து வைரங்களை இறக்குமதி செய்து அவற்றை பட்டை தீட்டி மீண்டும் ஆம்ஸ்டர்டாம் நகருக்கு மறு ஏற்றுமதி செய்தல்.

**25. இடைநிலையர் என்பவர் யார்?**

உற்பத்தியாளரிடமிருந்து இறுதி நிலை நுகர்வோரிடம் சென்றடையும் வரையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர்கள் ஆவார்.

**26. சில்லறை வியாபாரி வரைவிலக்கணம் தருக.**

நுகர்வோரின் தேவைகளைச் செவ்வனே பூர்த்தி செய்யும் பொருளாதாரச் சங்கிலியில் இறுதியாக இருப்பவர் சில்லறை வியாபாரி ஆவார் **– ஈவ்லின் தாமஸ்**

**27. தரகர் என்பவர் யார்?**

மற்றவர்களுக்காக முன்னின்று பேரம் பேசி வியாபாரத்தை இலாபகரமாக நிறைவேற்றி அதற்கெனக் கழிவு பெறும் நபர் தரகர் ஆவார்.

**28. வியாபார இடைநிலையரின் வகைகள் யாவை?**

i) மொத்த வியாபாரி ii) சில்லறை வியாபாரி

**29. வணிக முகவர்கள் என்பவர் யார்?**

ஒரு வியாபாரி தம் சார்பாகப் பொருட்களை வாங்கவும், விற்கவும் நியமிக்கப்படும் நபர் வணிக முகவர் ஆவார்.

**30. மடங்குக் கடையின் பொருள் யாது?**

ஒரே நிர்வாகத்தின் கீழ் பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான பொருட்களை விற்பனை செய்யும் இடம் மடங்குக் கடைகள் ஆகும்.

**எ.கா:–** பாட்டா ஷூ கம்பெனி

**31. தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?**

தானியங்கி விற்பனை எந்திரம் என்பது எந்திரம் வழியாக பொருட்களை நேரடியாக வாடிக்கையாளருக்கு விற்கும் எந்திரம் ஆகும்.

வாரத்தின் ஏழு நாட்களிலும், எந்த நேரத்திலும் (24 X 7) விற்பனை எந்திரத்திரங்கள் பொருட்களை வழங்குகின்றன.

**32. சிறப்புப் பண்டகச் சாலைகள் என்றால் என்ன?**

ஒரே வகையான பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்புப் பண்டகச் சாலைகள் எனப்படும். **எ.கா :–** திருநெல்வேலி அல்வா கடை

**33. சேவைத் தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?**

| | | |
|---|---|---|
| i) கல்வி | ii) மருத்துவம் | iii) சுகாதாரம் |
| iv) வங்கியியல் | v) போக்குவரத்து | vi) காப்பீடு |

**34. வங்கியின் பொருளை எழுதுக.**

பொது மக்களிடமிருந்து வைப்புகளை குறைந்த வட்டிக்கு பெற்று, தேவைப்படும் பொது மக்களுக்கு அதிக வட்டிக்கு கடன் வழங்குவது மற்றும் முதலீடு செய்வதும் வங்கியின் தொழில் ஆகும்.

**35. மைய வங்கி பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

- நமது நாட்டின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி ஆகும்.
- இது வங்கிகளின் வங்கியாக செயல்படுகிறது.
- நமது நாட்டிற்கான ரூபாய் நோட்டுகளை இது வெளியிடுகிறது.

**36. வணிக வங்கிகளின் பொருள் தருக.**

- பொது மக்களிடமிருந்து பல்வேறு வகைகளில் குறைந்த வட்டிக்கு வைப்புகளைப் பெற்று தேவைப்படும் பொது மக்களுக்கு வாணிபம், சிறுதொழில், விவசாயம் மற்றும் வியாபாரம் நடத்துவதற்கு அதிக வட்டிக்கு சிறு மற்றும் நடுத்தர கடன்கள் வழங்குவது வணிக வங்கிகள் ஆகும்.
- பணத்தை அனுப்புதல், பெட்டக வசதி அளித்தல், காசோலைகளுக்குப் பணம் வழங்குதல். போனற இதர சேவைகளையும் வணிக வங்கிகள் வழங்குகின்றன.

**37. தொழிற்துறை வங்கிகளைப் பற்றி நீவீர் அறிவது யாது?**

- தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குகிறது.
- தொழில்களை விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது தொழில் துறை வங்கிகள் ஆகும்.
- **எ.கா.–** இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI), இந்திய தொழில் கடன் முதலீட்டுக் கழகம்.

**38. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?**

வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள் வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

எ.கா:– i) பாங்க் ஆப் அமெரிக்கா – அமெரிக்கா. ii) பர்க்ளேஸ் பாங்க் – இங்கிலாந்து

**39. கைபேசி வங்கியியல் பற்றி கூறுக.**

கைபேசி செயலிகள் மூலம் ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை எங்கிருந்தும் இயக்க முடியும். இதுவே கைபேசி வங்கியியல் எனப்படும்.

**40. பற்று அட்டை (Debit Card) – சிறு குறிப்பு வரைக.**

- ♣ தானியங்கி பணம் வழங்கும் அட்டையே (ATM) பற்று அட்டை ஆகும்.
- ♣ இதன் மூலம் இந்தியாவில் எந்த பகுதியிலும் பொருட்களை வாங்க பற்று அட்டை பயன்படுகிறது.

**41. கடன் அட்டை (Credit Card) – சிறு குறிப்பு வரைக.**

- ♣ வாடிக்கையாளர் மற்றும் தகுதியுள்ள நபர்களுக்கு வங்கிகள் கடன் அட்டை வழங்குகின்றன.
- ♣ இந்த அட்டையின் மூலம் இந்தியாவில் எந்த கடையிலும் பொருட்கள் மற்றும் சேவைகளை முன்பணம் செலுத்தாமல் கடனாக வாங்க முடியும்.

**42. தானியங்கி பணம் வழங்கும் அட்டை (ATM) பற்றி நீவீர் அறிவது யாது?**

தானியங்கி பணம் வழங்கும் அட்டை மூலம் இந்தியாவில் எங்கிருந்தும் 24 மணி நேரமும், வாரத்தின் 7 நாட்களிலும் **(24 X 7)** தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் பெற முடியும்.

**43. பண்டகக் காப்பகங்கள் என்றால் என்ன?**

பண்டகக் காப்பகம் என்பது எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பொருட்களை சேமித்து வைக்கும் இடமாகவும் மற்றும் வழங்கல் மையமாகும்.

**44. பண்டகக் காப்பகங்களின் பல்வேறு வகைகள் யாவை?**

**<u>அ. உரிமையின் அடிப்படையில்:–</u>**

**i)** தனியார் பண்டகக் காப்பகம் **ii)** அரசு பண்டகக் காப்பகம்

**iii)** பொதுப் பண்டகக் காப்பகம் **iv)** கூட்டுறவு பண்டகக் காப்பகம்

**<u>ஆ. பண்டங்களின் தன்மை அடிப்படையில்:–</u>**

**i)** பொதுப் பண்டகக் காப்பகம்

**ii)** சிறப்பு பொருள் பண்டகக் காப்பகம்

**iii)** குளிர்சாதனப் பண்டகக் காப்பகம்

**iv)** தட்ப வெப்ப நிலைக் கட்டுப்பாடு பண்டகக் காப்பகம்

**45. பண்டகக் காப்பகங்களின் இரண்டு பணிகள் குறிப்பிடுக.**

**i)** பொருட்களை பாதுகாத்தல் **ii)** விலைகளை நிலைப்படுத்துதல்

**ii)** கடன் பெற உதவுதல் **iv)** தேவை மற்றும் வழங்கலை சமன்படுத்துதல்

**46. போக்குவரத்து – வரையறு.**

"ஓர் இருட்டறையில் மெழுகு வர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது". **– கே.கே. செக்சேனா**

**47. போக்குவரத்து மூலம் வழங்கப்படும் ஏதேனும் இரண்டு சேவைகளைப் பற்றிக் கூறுக.**

**i) உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது**

பொருளின் உற்பத்தியின் நோக்கம் நுகர்வு ஆகும். பயனுள்ள போக்குவரத்து முறை காலம் மற்றும் இடவசதிகளை உருவாக்குவதன் மூலம் பொருட்களின் தேவை மற்றும் பொருட்களின் மதிப்பு ஆகியவற்றில் குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது.

**ii) அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் தூண்டுகிறது**

பொருந்தாத இயற்கை நிலைமைகள் உள்ள அல்லது ஒரு பிராந்தியத்தில் உற்பத்தி செய்ய முடியாத நுகர்வுப் பொருள்களைப் பெற இது உதவுகிறது.

**48. நீர் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை எழுதுக.**

i) இது பிற போக்குவரத்தை விட மலிவான பயணமாக கருதப்படுகிறது.

ii) இது கனரக சுமைகளுக்கு மிகவும் பொருத்தமானது.

**49. ஆயுள் காப்பீட்டுத் திட்டாவண வகைளைக் குறிப்பிடுக.**

i) முழு ஆயுள் திட்டாவணம் ii) குறித்த வயது திட்டாவணம்

iii) கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணம் iv) ஆண்டுத் தொகை திட்டாவணம்

**50. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?**

- மருத்துவக் காப்பீடு என்பது எதிர்பாராமல் ஏற்படக் கூடிய மருத்துவச் செலவுகளினால் ஏற்படும் நிதி நெருக்கடியிலிருந்து விடுபட இழப்பீடு வழங்குகிறது.
- ஆகவே மருத்துவக் காப்பீடு செய்வது அவசியமான ஒன்றாகும்.

**மேலே உள்ள 50 இரண்டு மதிப்பெண் வினாக்கள் படித்தால்**
**குறைந்த பட்சம் 8 முதல் 10 மதிப்பெண்கள் உறுதி**

---

## பகுதி – இ (மூன்று மதிப்பெண் வினாக்கள்)
## சிறு வினாக்கள்

**1. வணிகம் பொருள் தருக.**

வாங்குதல் மற்றும் விற்றல் மட்டும் இல்லாமல் பண்டங்கள் மற்றும் பணிகளின் பரிமாற்றத்தை முழுமைப்படுத்தும் நடவடிக்கைகளின் தொகுப்பே வணிகம் ஆகும்

**2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக.**

பூம்புகாரில் உள்ள இரண்டு பெரிய நகரங்கள்

i) மருவூர்பாக்கம் – உள்நாட்டு நகரம்

ii) பட்டினப்பக்கம் – கடலோர நகரம்

ஆகியவை உணவுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களாக இருந்தது.

**3. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?**

i) கொற்கை ii) சாலியூர் iii) காயல்பட்டினம்

iv) மருங்காவூர் பட்டினம் v) குமரி

**4. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.**

- மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் எனலாம்.
- மனிதச் செயல்பாடுகளை பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**5. சிறு குறிப்பு வரைக. அ) தொழில் ஆ) சிறப்புத் தொழில்.**

**அ) தொழில் :–**

"தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை ஆகும்." **எ.கா: –** கைத்தறி நெசவு தொழில்

**ஆ) சிறப்புத் தொழில் :–**

சிறப்புத் தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வி தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் பணிகள் ஆகும்.

**எ.கா: –** வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பட்டயக் கணக்காளர்கள்

**6. தொழிலின் கருத்துக்களை விவரி?**

- இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை தொழில் ஆகும்.
- பொருட்கள் மற்றும் சேவைகள் பரிமாற்றம் அவசியமானது.
- இதில் வாங்குதல் மற்றும் விற்றல் தொடர்ந்து நடைபெறும்.

**7. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?**

- சேவைத் தொழில்கள் பொருட்களை உற்பத்தி செய்வதில்லை.

- ♣ மாறாக சேவைகளை இலாபத்திற்கு விற்கின்றன.

**எ.கா :–** மருத்துவம், கல்விச்சேவை, சுகாதாரம், வங்கி

8. **போக்குவரத்து – சிறு குறிப்பு வரைக.**

உற்பத்தி செய்த பொருட்களை உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களுக்குச் சென்று சேர்க்க வேண்டிய பணியைப் போக்குவரத்து செய்கிறது.

9. **ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.**

**i)** சம்பள வருமானம்

**ii)** வீட்டு சொத்திலிருந்து வருமானம்

**iii)** வணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழில் வருமானம்

**iv)** மூலதன ஆதாயங்கள்

**v)** ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம்

10. **குறிப்பு வரைக. அ) நேரடி வரி ஆ) மறைமுக வரி**

**அ) நேரடி வரி**

தனி நபரின் வருமானம் அல்லது அவரின் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு அவரால் செலுத்தப்படும் வரி நேரடி வரி ஆகும். **எ.கா:–** i) வருமான வரி ii) சொத்து வரி

**ஆ) மறைமுக வரி**

சரக்கு மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியே மறைமுக வரி ஆகும்.

**எ.கா:–** i) சரக்கு மற்றும் சேவை வரி

11. **நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?**

"நபர்" என்ற சொல்லில் பின்வருபவர்கள் அடங்குவர்.

i) தனிநபர் ii) இந்து கூட்டுக் குடும்பம் iii) கூட்டுப் பங்கு நிறுமம்

iv) கூட்டுறவு v) கூட்டாண்மை நிறுவனம் vi) உள்ளாட்சி நிர்வாகம்

vii) சட்ட ரீதியான செயற்கை நபர்கள்

12. **சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)**
- ♣ இந்தியாவின் சமமான வரி வீதத்தினை தோற்றுவிப்பது.
- ♣ ஏற்றுமதியை ஊக்குவிக்க வசூலிக்கப்பட்ட உள்ளிட்டு வரி திரும்பி வழங்கப்படுகிறது.
- ♣ ஏற்றுமதியின் மீது வரி இல்லை.

13. **சரக்கு மற்றும் சேவை வரியின் குறைபாடுகள் மூன்றினை எழுதுக.**
- ♣ நிலைச் சொத்து சந்தையில் எதிர்மறை தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.
- ♣ இவ்வரிக்கு பின்பு ஜவுளிப் பொருட்கள் விலை அதிகரித்துள்ளது.
- ♣ இது ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் இடம் பெயர்தல் இடர்பாடுகளைக் கொண்டுள்ளது.

14. **தனி உரிமையியலின் வகைகள் யாவை?**

தனி உரிமையியல் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அவை

i) தயாரிப்பு பொருள் அல்லது வர்த்தகப் பெயர் தனி உரிமையாக்கல்

ii) வணிக வடிவமைப்பு தனி உரிமை

15. **ஏட்டுக்கடன் முகமையில் உள்ள படிநிலைகள் யாவை? (ஏதேனும் 3)**

i) உரிமைப் பேராள் தமது வாடிக்கையாளர் கடனை திருப்பிச் செலுத்தும் தகுதியை மதிப்பீடு செய்கின்றார். பின் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகளில் எந்தத் தொகை அளவிற்கு மற்றும் கால அளவிற்கு தாம் கொள்முதல் செய்ய தயாராக உள்ளாரோ அதை வரையறை செய்கின்றார்.

ii) எப்பொழுதும் போல வாடிக்கையாளர் பொருட்களை விற்று அதற்குரிய சரக்குப் பட்டியலில் இச் சரக்குப்பட்டியலின் மீதான நிலுவையாக உள்ள தொகையின் உடைமை உரிமைச் சட்டப்படி மாற்றி வழங்கப்படுகிறது.

iii) வாடிக்கையாளர் சட்டப்படி உடமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப்பட்டியலின் நகல்களை உரிமைப் பேராள்களுக்கு அனுப்புகிறார்.

**16. வாங்குபவர் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?**

- ♣ உலகத்தின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருள்களைப் பற்றி வாங்குபவர்கள் மின்னணு வணிகத்தில் அறிய முடிகிறது.
- ♣ மின்னணு வணிகத்தில் நேரம் காலம் (24X7) ஏதும் பொருந்துவதில்லை.
- ♣ மின்னணு வர்த்தக முறையில் வாங்கும் பொருளின் விலை குறைவு.

**17. உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை? விளக்குக.**

உள்நாட்டு வியாபாரத்தை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். அவை

**i) மொத்த வியாபாரம்:–**

மொத்த வியாபாரம் என்பது பொருட்களை உற்பத்தி செய்பவர்களிடம் மொத்தமாக வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு குறைந்த அளவில் விற்கும் நடைமுறையாகும்.

**ii) சில்லறை வியாபாரம்:–**

சில்லறை வியாபாரம் என்பது மொத்த வியாபாரியிடம் பொருட்களை வாங்கி நுகர்வோருக்கு சிறிய அளவில் பொருட்களை வழங்கும் நடைமுறையாகும்.

**18. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி மூன்றினை குறிப்பிடுக.**

| ஏற்றுமதி பொருட்கள் | இறக்குமதி பொருட்கள் |
|---|---|
| பெட்ரோலியப் பொருட்கள் | எண்ணெய் மற்றும் சுரங்க எரிபொருள் |
| ஆட்டோ மொபைல்ஸ் | மின்சார இயந்திர சாதனங்கள் |
| மருந்துப் பொருட்கள் | கணினி உள்ளிட்ட இயந்திரங்கள் |

**19. வணிக முகவர்களின் வகைகள் யாவை?**

i) தரகர்கள் ii) தன் பொறுப்பு முகவர்கள் iii) கழிவு முகவர்கள்
iv) பிணை முகவர்கள் v) ஏலமிடுநர் vi) பண்டக காப்பாளர்

**20. மொத்த வியாபாரிகளின் பண்புநலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

- ♣ மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக பொருட்களை வாங்குகின்றனர்.
- ♣ மொத்த வியாபாரிகள் பொருட்களை மொத்தமாக வாங்கி சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
- ♣ மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு கடன் உதவி அளிக்கின்றனர்.

**21. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3)**

- ♣ சிறப்பங்காடிகள் நகரின் மையப்பகுதிகளில் அமைந்திருக்கும்.
- ♣ இங்கு ரொக்க விற்பனை மட்டும் உண்டு. கடன் கிடையாது.
- ♣ இதை அமைக்க அதிக முதலீடு தேவை.

**22. மடங்கு கடையின் குறைபாடுகள் யாவை? விளக்குக. (ஏதேனும் 3)**

**i) ஒரு சில பொருட்கள் மட்டும் விற்பனை:–**

மடங்குக் கடையில் குறிப்பிட்ட சில வகைப் பொருட்களை மட்டும் விற்பனை செய்வதால், வாடிக்கையாளர்கள் அவற்றை மட்டுமே வாங்க முடியும்.

**ii) வசதிகள் இல்லாமை:–**

இக்கடைகளில் வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் கடன் விற்பனை, வீட்டு விநியோகம், ஓய்வறை, விளையாடுமிடங்கள் போன்ற வசதிகள் கிடைப்பதில்லை.

**iii) நேரடித் தொடர்பின்மை:–**

உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை.

**23. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.**

- ♣ ஹில்டன் யங் ஆணையத்தின் பரிந்துரைப்படி இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 உருவாக்கப்பட்டது.
- ♣ இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.
- ♣ 1949 ஜனவரி 1 முதல் அரசுக்கு சொந்தமான மைய வங்கியாக செயல்பட்டு வருகிறது.
- ♣ தலைமை அலுவலகம் கொல்கத்தாவில் இருந்து 1937 இல் மும்பைக்கு மாற்றப்பட்டது.

**24. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை? (ஏதேனும் 3)**

- ♣ உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி.
- ♣ இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்

- ♣ பணவியல் உச்ச நிலை அதிகாரி
- ♣ பொருளாதார காரணிகளை கண்காணித்தல்
- ♣ புதிய சாவல்களுக்கு உடனடியாக பதில் அளிப்பது

**25. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?**

- ♣ இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுகின்றனர்.
- ♣ ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணை நிலை ஆளுநர்கள்.
- ♣ பல்வேறு துறைகளிலிருந்து பத்து இயக்குனர்கள்.
- ♣ இரண்டு அரசு அதிகாரிகள் மற்றும் வட்டார வாரியங்களிலிருந்து நான்கு இயக்குனர்கள்

**26. உள்ளூர் பகுதி வங்கிகள் பற்றி சிறு குறிப்பு வரைக. இரண்டு உதாரணங்களைத் தருக.**

- ♣ உள்ளூர் பகுதி வங்கி (LAB) திட்டம் ஆகஸ்ட் 1996 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ♣ கிராமப்புறச் சேமிப்புகளைத் திரட்டுவதும், அதே பகுதியில் முதலீடு செய்வதும் அவற்றின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.
- ♣ **எ.கா.:–** i) கரையோர உள்ளூர் பகுதி வங்கி – விஜயவாடா – ஆந்திரப் பிரதேசம்
  ii) சுபத்ரா உள்ளூர் வங்கி லிமிடெட் – கோல்பூர் – மகாராஷ்டிரா.

**27. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?**

- ♣ கூட்டுறவு சங்கங்களோடு சேர்ந்து கிராமப் புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதாகும்.
- ♣ கிராமப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி, கிராமப் புறக் கைவினைஞர்களுக்கும். சிறிய தொழில் முனைவோருக்கும். விவசாயிகளுக்கும் கடனுதவி அளிக்கிறது.

**28. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?**

- ♣ தற்போது அனைத்து வங்கிகளும் பரிவர்த்தனைக்கான நேரம் மற்றும் செலவை குறைத்து வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன.
- ♣ ஒரு வாடிக்கையாளர் (24 X 7) முறையில் பண பரிவர்த்தனைகளை உலகின் எந்த பகுதியிலிருந்தும் மேற்கொள்ள முடியும்.

**29. உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு (RTGS) பற்றி ஒரு குறிப்பு வரைக.**

- ♣ இது இந்திய ரிசர்வ் வங்கியால் 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ♣ பரிவர்த்தனைகள் உண்மையான நேரத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன.
- ♣ வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை, சனிக்கிழமைகளில் 2.00 மணி வரை இந்த வசதிகள் கிடைக்கும்.

**30. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) – விளக்குக.**

- ♣ இது இந்திய ரிசர்வ் வங்கியால் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ♣ காலை 8.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை நிதிப் பரிமாற்றம் நடைபெறும்.
- ♣ ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதியில்லை.

**31. பண்டக காப்பாளர் இரசீது – பண்டக சான்றாணை வேறுபடுத்துக. (ஏதேனும் 3)**

| அடிப்படை | பண்டக சான்றாணை | பண்டக் காப்பாளர் இரசீது |
|---|---|---|
| **1. உரிமை** | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமல்ல. |
| **2. மாற்றுதல்** | மற்றவருக்கு இதை மாற்ற இயலும். | மற்றவருக்கு இதை மாற்றித் தர இயலாது. |
| **3. பிணையம்** | இதை பிணையமாக வைக்க முடியும். | இதை பிணையமாக வைக்க முடியாது. |

**32. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?**

விரைவில் அழுகக் கூடிய பொருட்களான பால், பழங்கள், மீன், இறைச்சி போன்ற பொருட்களை சேமித்து வைப்பதற்கான பண்டகச் சாலை குளிர் சாதன பண்டகக் காப்பு ஆகும்.

33. **கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?**

- ♣ சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.
- ♣ எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அதுவே 'கப்பல் வாடகை ஒப்பாவணம்' என்று அழைக்கப்படும்.

34. **கப்பல் இரசீது என்றால் என்ன?**

- ♣ கப்பல் இரசீது என்பது ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒரு ஆவணமாகும்.
- ♣ இது கப்பல் நிறுவனத்தால் வழங்கப்படுவது மற்றும் கப்பலின் மாலுமியால் கையெழுத்திடப்பட்டிருக்கும்.
- ♣ கப்பலில் வைத்துள்ள பொருட்களை திரும்ப பெற்றுக் கொள்வதற்காக விவரிக்கப்பட்ட ஒப்புக் கொள்ளும் இரசீதை இது குறிக்கிறது.

35. **காப்பீட்டின் வரைவிலக்கணம் தருக.**

"தனி ஒருவருக்கு ஏற்படும் இடரை பலர் ஒன்றிணைந்து தங்களது தோள்களில் பகிர்ந்து கொள்ளும் திட்டமே காப்பீடு"ஆகும். **– ஜான் மெர்ஜ்**

36. **பயிர்க் காப்பீட்டின் பொருள் தருக.**

வறட்சி, வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் போது, இழப்பீடு வழங்குவதாக செய்யப்படும் காப்பீடு பயிர்க் காப்பீடு ஆகும்.

37. **இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI) என்பது என்ன?**

இந்தியாவிலுள்ள காப்பீட்டு நிறுவனங்களை மேற்பார்வை செய்து ஒழுங்குப்படுத்த ஓர் உயரிய தலைமை அமைப்பாக தனித்துச் செயல்படும் சட்டபடியான ஆணையமாகும்.

## மேலே உள்ள 37 மூன்று மதிப்பெண் வினாக்கள் படித்தால் குறைந்த பட்சம் 12 முதல் 15 மதிப்பெண்கள் உறுதி

---

## பகுதி – ஈ (ஐந்து மதிப்பெண் வினாக்கள்)

## பெரு வினாக்கள்

1. **வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக.**

**i) ஆள்சார் தடை:–**

- ♣ உற்பத்தியாளர் சிலர், நுகர்வோர் பலர் ஆகவே ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இதுவே ஆள்சார் தடை ஆகும்.
- ♣ இத்தடையை வியாபாரத்தின் மூலம் நீக்க முடிகிறது.

**ii) இடத் தடை:–**

- ♣ உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே உள்ள தூரமே இடத் தடை ஆகும்
- ♣ போக்குவரத்து இக்குறைப்பாட்டை நீக்க உதவுகிறது.

**iii) காலத் தடை:–**

- ♣ உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடைப்பட்ட காலம் காலத் தடை ஆகும்.
- ♣ பண்டகக்காப்பகம் இத்தடையை நீக்குகிறது.

**iv) நட்ட இடர்பாட்டுத் தடை:–**

- ♣ சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க கொண்டு செல்லும் போதோ, இருப்பு வைத்திருக்கும் போதோ பொருட்களுக்கு சேதம் ஏற்பட வாய்ப்பு உண்டு, இக்குறைப்பாடு நட்ட இடர்பாடுத் தடை எனப்படும்.
- ♣ இத்தடையை காப்பீட்டின் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

**v) நிதித் தடை :–**

- ♣ உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் நிதி தேவையான நேரத்தில் கிடைப்பது இல்லை. இத் தடை நிதித் தடை ஆகும்.

- ♣ இத் தடையை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் நீக்குகின்றன.

2. **பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாக கூறப்பட்டுள்ளன யாவை?**

**i) தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் இருத்தல்:–**

ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

**ii) உரிமை மாற்றுத் தேவையாக இருத்தல்:–**

இருவருக்கும் அப்பொருட்கள் உரிமை மாற்றுத் தேவையாக இருக்க வேண்டும்.

**iii) இருவருக்கும் நேரடித் தொடர்பு:–**

பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு முக்கியமாகக் கருதப்படும்.

3. **பண்டைத் தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.**

பூம்புகாரில் உள்ள இரண்டு பெரிய நகரங்கள்

i) மருவூர்பாக்கம் – உள்நாட்டு நகரம் ii) பட்டினப்பக்கம் – கடலோர நகரம்

ஆகியவை உணவுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களாக இருந்தது.

- ♣ முத்துக்கள், பவளங்கள், மீன்பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் கப்பல் கட்டுதலிலும், பாண்டியர்கள் ஈடுபட்டிருந்தனர்.
- ♣ தொண்டி, கொற்கை, பூம்புகார் மற்றும் முசிறி போன்ற துறைமுகங்கள் இருந்தன.

4. **தொழிலின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)**

**i) பொருட்களை உற்பத்தி செய்தல் :–**

மனிதத் தேவையைப் பூர்த்தி செய்யப் பொருட்களை உற்பத்தி செய்தல் வேண்டும்.

**ii) விற்பனை :–**

தொழிலின் மிக முக்கிய தன்மை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் ஆகும்.

**iii) இலாப நோக்கம் :–**

தொழிலின் மிக முக்கியத் தன்மை இலாபம் ஈட்டுவது ஆகும்.

**iv) ஒழுங்கு முறையில் தொடர்பு :–**

தனிப்பட்ட முறையில் வாங்கி விற்பது தொழிலாகாது. தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

**v) இடர்ப்பாட்டிற்கான கூறு :–**

இலாபம் ஈட்டுதல் என்பது இடர்ப்பாட்டை எதிர் கொள்வதற்கான வெகுமதியாகக் கருதப்படுகிறது.

5. **தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு – ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)**

| அடிப்படை | தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| i) தகுதி | குறைந்தபட்ச தகுதி தேவை இல்லை | சிறப்பு தகுதி தேவை | குறைந்தபட்ச தகுதி தேவை இல்லை |
| ii) வெகுமதி | இலாபம் கிடைக்கும் | தொழில் கட்டணம் | கூலி, சம்பளம் |
| iii) இடர் | இடர் உண்டு | இடர் கிடையாது | இடர் ஏதும் இல்லை |
| iv) உரிமை மாற்றம் | உரிமை மாற்றம் உண்டு | உரிமை மாற்றம் இல்லை | உரிமை மாற்றம் இல்லை |
| v) மூலதனம் | மூலதனம் தேவை | குறைந்த நிதி தேவை | மூலதனம் தேவை இல்லை |

6. **தொழிலின் நோக்கங்களை விவரி.**

**i) பொருளாதார நோக்கங்கள்:–**

பொருளாதார நோக்கங்கள் என்பது இலாபம் ஈட்டுவது.

**ii) சமூக நோக்கங்கள்:–**

சமூக நலன்களை பேணுவது தொழிலமைப்புகளுக்கு முக்கியமானதாகும்.

**iii) நிறுவன நோக்கங்கள்:–**

தொழிலமைப்பின் முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்படுவதாகும்.

**iv) மனித நோக்கங்கள்:–**

பணியாளர் நலன் மற்றும் எதிர்காலத் தேவையை நிறைவேற்றுவதாகும்

**v) தேசிய நோக்கங்கள்:–**

மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சமூக நீதியை நிலை நாட்டுதல் போன்றவையாகும்.

**7. உற்பத்தித் தொழில், வணிகம், மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)**

| | உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|
| **i) பொருள்** | பொருட்களை தயாரித்தல் | பொருட்களை வழங்குதல் | பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றல் |
| **ii) இடர்பாடு** | இடர்பாடு அதிகம் | இடர்பாடு குறைவு | இடர்பாடு குறைவு |
| **iii) முதல்** | அதிக முதலீடு தேவை | குறைந்த முதலீடு தேவை | குறைந்த முதலீடு தேவை |
| **iv) பரிமாணம்** | அளிப்பை பிரதிபலிக்கிறது | தேவையை பிரதிபலிக்கிறது | அளிப்பு மற்றும் தேவையை பிரதிபலிக்கிறது |
| **v) பயன்பாடு** | உருவப் பயன்பாட்டை உருவாக்குகிறது | இடப் பயன்பாட்டை உருவாக்குகிறது | உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது |

**8. சிறு குறிப்பு வரைக. அ) பகுப்பய்வு உற்பத்தி தொழில்கள் ஆ) மரபுசார் உற்பத்தி தொழில்கள் இ) கட்டுமான உற்பத்தி தொழில்கள்**

***அ) பகுப்பாய்வு உற்பத்தி தொழில்:–***

இத்தொழிற்சாலை ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரிப்பதை மேற்கொள்வது. **எ.கா.:–** கச்சா எண்ணை–எரிவாயு–டீசல்

***ஆ) மரபுசார் உற்பத்தி தொழில்கள்:–***

தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுகின்றன.

**எ.கா.:–** கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு.

***இ) கட்டுமான உற்பத்தி தொழில்கள்:–***

கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்களை தயாரிப்பது. **எ.கா.:–** சிமெண்ட்.

**9. வருமான வரியில் ஐந்து சிறப்புக் கூறுகளை விளக்கி எழுதுக.**

***வருமான வரியின் சிறப்புக் கூறுகள்:–***

i) அரசியலமைப்பின் படி விதிக்கப்படுகிறது.
ii) மத்திய அரசால் விதிக்கப்படுகிறது.
iii) வருமானத்தின் மீது வரி கணக்கிடப்படுகிறது.
iv) நேர்முக வரி
v) ஆண்டு வரி
vi) நபரின் மீது விதிக்கப்படுகிறது.
vii) குறிப்பிட்ட வீதத்தில் விதிக்கப்படுகிறது.

**10. நேரடி வரியையும், மறைமுக வரியையும் வேறுப்படுத்துக.**

| அடிப்படை | நேரடி வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **பொருள்** | வரி யார் மீது விதிக்கப்படுகிறதோ அவரே வரி செலுத்த வேண்டும் | வரிச் சுமையினை மற்றொருவர் மீது மாற்றுவது |
| **ஏய்ப்பு** | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| **பண வீக்கம்** | இது பண வீக்கத்தை குறைக்க உதவுகிறது | இது பண வீக்கத்தை ஊக்குவிக்கிறது |
| **சுமை** | இதனை மாற்ற முடியாது | இதனை மாற்ற முடியும் |
| **இயல்பு** | வளர்வீத வரி. | பிற்போக்கு வரி. |
| **எடுத்துக்காட்டு** | சொத்து வரி, வருமான வரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

11. **சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.**

**<u>i) மத்திய சரக்கு மற்றும் சேவை வரி:–</u>**

சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரியாகும்.

**<u>ii) மாநில சரக்கு மற்றும் சேவை வரி:–</u>**

பொருட்கள் மீது மாநில அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரியாகும்.

**<u>iii) யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி:–</u>**

யூனியன் பிரதேசங்களால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரியாகும்.

**<u>iv) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி:–</u>**

சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு மாநில அரசுகளுக்கு வருவாய் பகிர்வது.

12. **உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)**

- ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
- உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
- இதில் போக்க்குவரத்து இடர்பாடு குறைவு.
- உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டும் பின்பற்றப்படும்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமே இடம் பெறும்.

13. **வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி.**

**<u>i) இறக்குமதி வியாபாரம்:–</u>**

உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.

**எ.கா:–** வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை வாங்குதல்

**<u>ii) ஏற்றுமதி வியாபாரம்:–</u>**

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**எ.கா:–** மதுரையிலிருந்து சிங்கப்பூருக்கு மல்லிகைப்பூக்கள் ஏற்றுமதி செய்தல்

**<u>iii) மறு ஏற்றுமதி வியாபாரம்:–</u>**

ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறு நாடுகளுக்கு விற்பது மறு ஏற்றுமதி ஆகும். **எ.கா:–** தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து வைரங்களை இறக்குமதி செய்து துண்டாக்கி பட்டை தீட்டி மீண்டும் வேறு நாடுகளுக்கு மறு ஏற்றுமதி செய்தல்

14. **சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் யாவை?**

- சில்லறை வியாபாரிகள் பல்வேறு பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பார்.
- மொத்த வியாபாரிகளிடம் மொத்தமாகப் பொருட்களை வாங்கி சிறிய அளவில் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.
- முக்கியச் சந்தைப் பகுதிகளில் சில்லறை விற்பனை நிலையங்கள் இடம் பெறும்.
- பொதுவாக மொத்த வியாபாரியிடம் கடன் அடிப்படையில் சரக்குகளை வாங்கி நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு விற்கின்றனர்.
- சில்லரை வியாபாரிகள் நுகர்வோரிடம் நேரடி தொடர்பிலும், உற்பத்தியாளரிடம் இருந்து விலகியும் இருப்பார்.

15. **மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை? (ஏதேனும் 5)**

**<u>i) பொருட்களை ஒன்று திரட்டல் :–</u>**

உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்த வியாபாரிகள் பலவகைப்பட்ட பொருட்களை வாங்கி ஒன்று திரட்டுகின்றனர்.

**<u>ii) பொருட்களை இருப்பு வைத்தல் :–</u>**

உற்பத்தியாளரிடம் வாங்கிய பொருட்களை விற்பனை வரையில் அதன் தரம் குறையாமல் சேமக்காப்பு செய்கின்றனர்.

**<u>iii) விநியோகம் :–</u>**

மொத்த வியாபாரி நாடெங்கிலும் உள்ள சில்லறை வியாபாரிகளுக்குப் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

iv) நிதி வசதி அளித்தல் :–

மொத்த வியாபாரி உற்பத்தியாளருக்கு முன்பணம் அளிப்பதன் மூலம் நிதி வசதி அளிக்கிறார். சில்லரை வியாபாரிகளுக்கு கடன் விற்பனை செய்வதன் மூலம் நிதி வசதி அளிக்கிறார்.

v) இடர் ஏற்பு :–

பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டவுடன் வாங்கி அவற்றை தமது பொறுப்பில் வைப்பதன் மூலம் ஏற்படும் இடர்களை மொத்த வியாபாரியே ஏற்றுக் கொள்கிறார்.

**16. சில்லறை வியாபாரிகளின் பணிகள் யாவை? (ஏதேனும் 5)**

i) வாங்குதல் :–

சில்லரை வியாபாரிகள் நுகர்வோரின் தேவைக்கேற்ப பல்வேறு மொத்த வியாபாரிகளிடம் பல்வேறு வகையான பொருட்களை வாங்கித் தனது கடைகளில் விற்பனைக்கு வைக்கின்றனர்.

ii) இருப்பு வைத்தல் :–

சில்லறை வியாபாரி பொருட்களை விற்பனைக்கு தயார் நிலையில் காட்சிக்கு வைத்திருக்கின்றனர்.

iii) விற்பனை செய்தல் :–

சில்லரை வியாபாரி நுகர்வோர்களுக்கு அவரது தேவைகள், சுவை, மற்றும் விருப்பத்திற்கேற்ப சிறிய அளவுகளில் விற்பனை செய்கின்றனர்.

iv) இடர் ஏற்றல் :–

சில்லரை வியாபாரி நுகர்வோரின் எதிர்காலத் தேவைக்கேற்ப பொருட்களை வாங்கி இருப்பு வைப்பதன் மூலம் ஏற்படும் இடர்களை ஏற்றுக் கொள்கிறார்.

v) நிதியளிப்பு :–

சில்லறை வியாபாரிகள் தமது வாடிக்கையாளருக்கு கடன் விற்பனை செய்வதன் மூலம் நிதி வசதி அளிக்கிறார்.

**17. துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளை விவரி. (ஏதேனும் 5)**

i) பேரளவு அமைப்பு :–

அதிக முதலீடு செய்து உருவாக்கப்பட்ட பெரிய சில்லறை வியாபார நிறுவனம் துறைவாரி பண்டகசாலை ஆகும்.

ii) பல்பொருள் விற்பனை :–

மனிதனுக்குத் தேவையான அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

iii) துறைகளின் ஒருங்கிணைப்பு :–

பல்வேறு துறைகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையான பொருட்களை தனித் தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.

iv) வாங்கும் வசதிகள்:–

வாடிக்கையாளர்களுக்கு ஓய்வு அறைகள், சிற்றுண்டிச்சாலை வாகனம் நிறுத்துமிடம், பொழுது போக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப் படுகின்றன.

v) மையக் கொள்முதல்:–

அனைத்து வகைப் பொருள்களும் ஒரு மையத்தின் மூலம் நேரடியாக தயாரிப்பாளரிடமிருந்து பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது.

**18. சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)**

i) நடைபாதை வியாபாரிகள்:–

வீதிகள் குறுக்கிடும் இடங்களின் ஓரங்களிலும், நடைபாதைகளிலும் தற்காலிகமாக விற்பனை செய்பவர்கள் நடைபாதை வியாபாரிகள் எனப்படுவர். **எ.கா:–** பூ, காய்கறி, புத்தகக் கடைகள்

ii) தெருக்கடை வியாபாரிகள்:–

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தெருக்களின் முனைகளிலோ, திரும்பும் இடங்களிலோ கடை அமைத்து விற்பனை செய்வர்கள் தெருக்கடை வியாபாரிகள் எனப்படுவர்.

**எ.கா:–** ஆடை வகைகள், பொம்மைகள், தின்பண்டங்கள், குளிர்பானக் கடைகள்

**iii) ஒரே வகை பண்டகசாலை:–**

ஒரு குறிப்பிட்ட வகை பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் சில்லறை வியாபாரம் ஒரே வகை பண்டகசாலை எனப்படும்.

**எ.கா:–** ஆயத்த ஆடைகள் மட்டும் விற்கும் கடைகள், காலனிகள் மட்டும் விற்கும் கடைகள்

**iv) சிறப்பு பண்டகசாலைகள்:–**

ஒரு வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்பு பண்டகசாலைகள் எனப்படும்.

**எ.கா:–** இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர், துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விற்போர்

**v) அஞ்சல் வழி வியாபாரம்:–**

வாடிக்கையாளரிடமிருந்து ஆணைகளைப் பெற்று பொருட்களை அஞ்சல் வழியாக அவர்களின் வீட்டிற்கே அனுப்பி வியாபாரம் செய்வதை அஞ்சல் வழி வியாபாரம் என்கிறோம். இவ்வகையில் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் நேரடித் தொடர்பில்லை.

**எ.கா:–** பிலிப்கார்ட், அமெசான்

**19. பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? (ஏதேனும் 5)**

**i) தனியார் பண்டகக் காப்பகங்கள்:–**

தனியார் தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களால் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவையாகும்.

**ii) அரசு பண்டகக்காப்பகங்கள்:–**

அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அரசு இந்த பண்டகக் காப்பகங்களை உருவாக்கி நடத்தி வருகிறது. இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

**iii) கூட்டுறவு பண்டகக்காப்பகங்கள்:–**

இவ்வகை பண்டக்காப்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்கின்றன. இது இதன் உறுப்பினர்கள் வசதிக்காக அமைக்கப்படுகிறது.

**iv) சிறப்புப் பொருள் பண்டகக்காப்பகங்கள்:–**

புகையிலை, பருத்தி, கம்பளி, பெட்ரோல், போன்ற குறிப்பிட்ட வகை பொருட்களை பாதுகாக்க இது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

**v) குளிர்பதன பண்டகக்காப்பகங்கள்:–**

பால், பழங்கள், மீன், இறைச்சி போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இது பயன்படுகின்றன.

**20. பண்டகக் காப்பின் நன்மைகளை விவரி.**

**i)** சரக்குகளை சேமித்து வைக்க இட வசதி இல்லாத வியாபாரிகளுக்கு பயன்படுகின்றது.

**ii)** சரக்குகள் மொத்தமாக சேமித்து வைப்பதன் மூலம் வியாபாரிகளின் விநியோக செலவுகளைக் குறைத்து பொருட்களை சிறிய அளவில் எடுத்துக் கொள்ள உதவுகிறது.

**iii)** இது வழங்கல் வழியை தீர்மானிக்க உதவுகிறது. உற்பத்தியாளர் இதன் மூலம் மொத்த வியாபாரி அல்லது சில்லறை வியாபாரி என யாரை நியமிக்கலாம் என முடிவு செய்ய உதவுகின்றது.

**iv)** இது ஆண்டு முழுவதும் விற்பனைக்கு உதவுகிறது மற்றும் "பொருள் இல்லை " என்ற நிலை ஏற்படாமல் தவிர்க்கிறது.

**v)** திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் இருவருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றது.

**21. போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5) / நிலப் போக்குவரத்தின் ஏதேனும் ஐந்து வகைகளை விளக்குக.**

**I. நிலப் போக்குவரத்து:–**

**i) பொதி விலங்குகள்**

- மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும் சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும்.

- ♣ குதிரை, கோவேறு கழுதை, கழுதை. ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள் என்று அழைக்கப்படுகின்றது.

**ii) மாட்டு வண்டிகள்**

- ♣ இந்தியாவில் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளே ஆகும்.
- ♣ இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது.

**iii) சாலை போக்குவரத்து**

- ♣ சாலை போக்குவரத்து என்பது குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது.
- ♣ மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்க துணை புரியவும் உதவுகிறது.

**iv) இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்**

நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும், சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.

**v) டிராம் வண்டிகள்**

- ♣ 19–ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது.
- ♣ டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும் பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.

***<u>போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்:–</u>***

i) மெட்ரோ இரயில் ii) மோனா இரயில்
iii) புல்லட் இரயில் iv) குழாய் போக்குவரத்து
v) கன்வேயர் போக்குவரத்து vi) கயிறு வழி போக்குவரத்து
vii) உயர் சுழற்றி வளையப் போக்குவரத்து.

**22. தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் 5)**

i) நீண்ட தூரத்திற்கு, கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.

ii) தடையற்ற சேவைகளால் நீண்ட தொலைவு பயணத்தை பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.

iii) இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.

iv) இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.

v) மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்கு சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.

**23. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)**

**<u>i) மிக்க நம்பிக்கை:–</u>**

காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.

**<u>ii) காப்பீடு பெறுநலன்:–</u>**

காப்பீடு பெறுநருக்கு காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.

**<u>iii) ஈட்டுறுதி:–</u>**

ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடுசெய்வதே ஈட்டுறுதியாகும்.

**<u>iv) அண்மைக் காரணம்:–</u>**

ஒரு இழப்பு ஏற்பட இரண்டிற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின் அதற்குரிய அண்மைக் காரணம் மட்டும் குறிப்பிடுவதாகும்.

**v) பகர உரிமை:–**

ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை காப்பீடு தருநர் ஈடு செய்த பின் காப்பீடு பெறுநரின் உரிமைகளை காப்பீடு தருனருக்கு மாற்றுவதாகும்.

**24. காப்பீட்டின் வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)**

**i) ஆயுள் காப்பீடு:–**

ஒரு குறிப்பிட்ட தொகையை முனைமமாகப் பெற்றுக் கொண்டு அவரது ஆயுளை காப்பீடு செய்யும் ஒரு ஒப்பந்தமாகும்.

**ii) தீக் காப்பீடு:–**

காப்பீடு பெறுநரின் சொத்துக்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தீயினால் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டும் ஒரு ஒப்பந்தமாகும்.

**iii) கடல் சார் காப்பீடு:–**

காப்பீடு பெறுநருக்கு கடல் பயணங்களின் போது ஏற்படும் இழப்புகளுக்கு ஈடு செய்யும் ஒரு ஒப்பந்தமாகும்.

**iv) உடல் நல காப்பீடு:–**

இது எதிபாராமல் ஏற்படக் கூடிய மருத்துவச் செலவுகளினால் ஏற்படும் நிதி நெருக்கடியிலிருந்து விடுபட இழப்பீடு வழங்குகிறது.

**v) இதரக் காப்பீடு:–**

மோட்டார் வாகனக் காப்பீடு, கொள்ளை சார் காப்பீடு, கால் நடைக் காப்பீடு, பயிர் காப்பீடு போன்றவையாகும்.

**25. தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5)**

**i) இடர்களை குறைத்தல்**

தனி உரிமம் பெற்றவர் ஏற்கனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைத் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.

**ii) வணிக விரிவாக்கம்**

பிராந்திய தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.

**iii) விளம்பரச் செலவு**

வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால், குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையாளர் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**iv) செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்**

தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது. அதை வடிவமைக்கும் முறை பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

**26. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி.**

**i) கடன் ஏடுகளை பராமரித்தல்**

தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழுப் பொறுப்பினை தனி உரிமைப் பேராளான் ஏற்றுக்கொள்கிறார்

**ii) கடன் எல்லைகளை நிர்வகித்தல்**

வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையைத் தனி உரிமைப் பேராளன் ஏற்றுக் கொள்கிறார். இதனால் வணிக தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக்கவனம் செலுத்துகிறார்.

**iii) ரொக்க முன்பணம்**

கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 விழுக்காடு முன்கூட்டியே வணிகர் பெற்று விடுகிறார். இதனால் தன்னுடைய வியாபார நீர்மைத் தன்மை பாதிக்கப்படுவதில்லை.

**iv) வசூல் சேவை**

வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல் பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த நிதிச் சேவையில் அடங்கும்.

**v) தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்**

தனி உரிமைபேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபார செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

**27. உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)**

| | அடிப்படை | உலகளாவிய வைப்பு இரசீது (GDR) | அமெரிக்க வைப்பு இரசீது (ADR) |
|---|---|---|---|
| 1 | மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும். | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| 2 | யாருக்கு இது வெளியிடப்படும் | இது ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| 3 | எங்கு பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்து இதர பங்கு மாற்றகங்களில் பட்டியலிடப்படும். | அமெரிக்கப் பங்கு மாற்றங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| 4 | ஒப்புதல் | இதனை வெளியிட அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை | இதனை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் ஒப்புதல் தேவை |
| 5 | மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்றக்கூடியது. | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது. |

**28. கப்பல் ரசீதிற்கும், கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| | அடிப்படை | கப்பல் ரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|---|
| 1 | **பொருள்** | இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக் கொண்டு, குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணம் ஆகும். | இது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| 2 | **மாற்றும் தன்மை** | இதை எளிதில் மேலெழுதுதல் வாயிலாக, மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியும். | இதை மூன்றாம் நபருக்கு மாற்றி தர முடியாது. |
| 3 | **கடன் பெறுதல்** | இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம். | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| 4 | **குத்தகை** | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் அல்ல. | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் ஆகும். |

**29. உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| | அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|---|
| **1.** | **பொருள்** | ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |

| | | | |
|---|---|---|---|
| 2. | **உற்பத்திக் காரணிகளின் இயக்கம்** | ஒரு நாட்டின் எல்லைக்குள் இடம் பெற முடியும் | ஒரு நாட்டின் எல்லைத் தாண்டி இடம் பெற முடியும் |
| 3. | **வியாபாரத்திரல் பங்கு பெறுவோர்** | ஒரு நாட்டில் உள்ள மக்களும் நிறுவனங்களும் பங்கேற்கின்றனர் | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும் நிறுவனங்களும் பங்கேற்கின்றனர் |
| 4. | **வியாபார முறை** | உள்நாட்டில் அமுலில் உள்ள விதிகள், சட்டங்கள், கொள்கைகள், பின்பற்றப்பட வேண்டும் | பல நாடுகளுடைய விதிகள்,சட்டங்கள், கொள்கைகள், பின்பற்றப்பட வேண்டியுள்ளது. |
| 5. | **பயன்படுத்தும் நாணய மதிப்பு** | உள்ளூர் நாணய மதிப்பில் நடவடிக்கைகள் மதிப்பில் நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன | அயல்நாட்டு நாணய மதிப்பில் நடவடிக்கைகள் மதிப்பில் நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன |

30. **செலுத்தல் சமநிலைக்கும், வாணிப சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.** (ஏதேனும் 5)

| | அடிப்படை | செலுத்தல் சமநிலை | வாணிப சமநிலை |
|---|---|---|---|
| 1 | பொருள் | குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் ஒரு நாட்டின் குடியிருப்போர்களுக்கும் மற்ற நாடுகளின் குடியிருப்போர்களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான பதிவுகளில் ஒரு அறிக்கை | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கும் |
| 2 | நடவடிக்கைகளின் தன்மை | இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும் |
| 3 | பதிவு செய்தல் | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை. |
| 4 | நிகர விளைவு | எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும் | இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும் |
| 5 | பொருளாதார நிலையைக் காட்டுதல் | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில்லை |

31. **ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| தலைப்பு | ஒப்பந்தம் | உடன்பாடு |
|---|---|---|
| **பொருள்** | இது சட்டத்தால் நடைமுறைப்படுத்துவது. | இது மறுபயனை உருவாக்கும் உறுதிமொழியாகும். |
| **செயலாக்கத் தன்மை** | அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும். | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது. |
| **பரஸ்பர உறவு** | ஒப்பந்தம் என்பது உடன்படிக்கை உள்ளடக்கியது. | உடன்படிக்கையில் எல்லா ஒப்பந்தம் உள்ளடக்கியது அல்ல. |

| | | |
|---|---|---|
| **செல்லக் கூடியது** | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும். | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும். |
| **சட்டபூர்வமான கடமை** | இவை அனைத்திலும் சட்டபூர்வ கடமை உள்ளன.. | சட்டப்பூர்வமான கடமை இருக்க வேண்டிய அவசியம் இல்லை |

**மேலே உள்ள 31 ஐந்து மதிப்பெண் வினாக்கள் படித்தால்**
**குறைந்த பட்சம் 15 முதல் 25 மதிப்பெண்கள் உறுதி**

---

## மொத்தத்தில் சுமார் குறைந்த பட்சம் 45 முதல் 55 மதிப்பெண்கள் உறுதி

இந்த கையேடானது மெல்ல கற்கும் மாணவர்களுக்காக மட்டும் பயன்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து மீத்திறன் மற்றும் சராசரி மாணவ செல்வங்களுக்கு இதை பயன்படுத்த வேண்டாம்.

**வாழ்த்துகளுடன்**

என்றும் அன்புடன்...

**மு.காதர்,** எம்.காம்., பி.எட்., எம்.பில்.,
முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புதுப்பாளையம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
செல்:– 94863 35786

---